**DILKA WATCH & RADIO WORKS**
Specialist in Watch & Radio Repairs
★
284, STANLEY ROAD, (Near Vanavil Cool Bar) JAFFNA.
★ BRANCH:
Kandy Road, Chavakachcheri.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

**டில்கா வாச் வேக்ஸ் அன் றேடியோ வேக்ஸ்**
சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும்.
284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) யாழ்ப்பாணம்.
★ கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 07 திங்கட்கிழமை (22 – 11 – 1993) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 359

# படையினர் கைஓங்குவதற்கு இனி வாய்ப்புக் கிடைக்காது!

## ராணுவ விமர்சகர்கள் கருத்து

கொழும்பு, நவம்பர் 22

பூநகரித் தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட பேரழிவால் அவர்களின் மனவுறுதி முன்னர் எப்போதும் இல்லாதவாறு குன்றிப் போய் இருக்கிறது.

இனி எதிர்காலத்தில் — எந்தச் சந்தர்ப்பத்திலாவது தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான போரில் ஸ்ரீலங்காப் படையினரின் கை ஓங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுமா என்ற கேள்விக் குறியை பூநகரித் தாக்குதல் ஏற்படுத்தியிருக்கிறது.

இராணுவ விமர்சகர்கள் இவ்வாறு குறிப்பிடுவதாக பி.பி.ஸி. நேற்றிரவு அறிவித்தது.

பூநகரி தாக்குதல் விளைவு குறித்து பி.பி.ஸி. நேற்றிரவு ஒலிபரப்பிய செய்திக் கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

பூநகரித் தாக்குதலில் அரச படைக்கு ஏற்பட்டிருக்கும் இழப்புகள், தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான போராட்டத்தில் அரச படைகளின் கை இனி எந்தச் சந்தர்ப்பத்திலாவது ஓங்குவதற்கு வாய்ப்புக் கிடைக்குமா என்ற கேள்விக்குறியை எழுப்பியிருக்கிறது.

தீர்வு ஒன்று எட்டப்படாத

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாவீரர் வார நிகழ்ச்சிகள் நடைபெற்ற வேளையில்

## வெருகலில் முன்னேற முயற்சித்த இராணுவத்தினர் மீது தாக்குதல்!

### சிப்பாய் பலி; ஐவர் காயம்

திருமலை மாவட்டம் வெருகல், முகத்துவாரம் பகுதியில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் மாவீரர் வார நிகழ்ச்சிகள் நடைபெற்ற வேளை வெருகல், ஈச்சிலம்பத்தை, 49 ஆம் கட்டை ஆகிய முகாம்களில் இருந்து இராணுவத்தினர் முன்னேறினர்.

முட்டிச்சேனை, வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளை நோக்கி முன்னேறிய படையினரை முட்டிச்சேனைப் பாலத்தில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர். அதனையடுத்து அங்கு மோதல் ஏற்பட்டது. சுமார் 45 நிமிட நேரம் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து படையினர் பின் வாங்கினர்.

மீண்டும் காலை 10.30மணியளவில் வெருகல் இராணுவ முகாமில் இருந்து கடும் ஷெல் தாக்குதலை நடத்தியவாறு இராணுவத்தினர் முன்னேறினர். அவர்களை வழி மறித்தும் விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

இந்தச் சம்பவங்களில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஐந்து பேர் காயமுற்றதாகவும் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன (உ-5)

## பன்குளத்தில் புலிகள் அதிரடி! விமானப்படையினர் இருவர் பலி!!

### ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், நவ. 22

திருகோணமலை பன்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள விமானப்படை முகாமில் இருந்து நேற்றுக் காலை 8.45 மணியளவில் வீதிகளைத் துப்பரவு செய்ய வந்த விமானப்படையினர் மீது — முகாமிலிருந்து சுமார் 300மீற்றர் தூரத்தில் வைத்து — விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலின் போது விமானப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர்; பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை.

விமானப்படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ரீ-81 ரகத் துப்பாக்கி — | 02 |
| ★ | ஜே. ஆர். ரக கிரனேட் — | 04 |
| ★ | நடுத்தர ரவைகள் — | 320 |
| ★ | மழைக் கவசம் — | 07 |
| ★ | ஏ. கே. ஹோல்ஸர் — | 02 |
| ★ | இராணுவப் பட்டி — | 02 |
| ★ | தண்ணீர் கான் தாங்கி — | 01 |
| ★ | தொப்பி — | 01 |
| ★ | தலைக் கவசம் — | 01 |

இதனிடையே மட்டக்களப்பு மாவட்டத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ-5-15)

## மண்டைதீவு ஷெல்லினால் குருநகரில் தேவாலயம் சேதம்

### நேற்று அதிகாலை சம்பவம்

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மண்டைதீவு படையினர் ஏவிய ஷெல்லொன்று குருநகர் புனித கார்மேல் மாதா தேவாலயக் கூரையில் வீழ்ந்து வெடித்ததில் ஆலயம் பாரிய சேதத்திற்கு உள்ளாகியது.

மற்றொரு ஷெல் றெக்கிளமேஷன் மத்திய கிழக்கு வீதியிலுள்ள வீடொன்றில் வீழ்ந்து வெடித்ததால் வீடு பலத்த சேதமடைந்துள்ளது. வீட்டில் எவரும் தங்காததால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

புனித கார்மேல் மாதா தேவாலயத்தில் வீழ்ந்த ஷெல்லினால் ஆலயத்துள் இருந்த உத்தரிய மாதா, புனித அந்தோனியார், கல்லறை ஆண்டவர் சொரூபங்கள் இருந்த கூடுகளின் கண்ணாடிகள் நொருங்கின. ஆலயக் கூரையிலும் பாரிய சேதம் உண்டானது.

மாதா சொரூபத்தில் அணியப் பட்டிருந்த முடி ஆலய நடு மண்டபத்தில் வீசப்பட்டுக் கிடந்தது. சொரூபங்களில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை.

மேற்படி ஷெல்லினால் ஆலயத்தை அடுத்துள்ள வீடொன்றும் சிறு சேதத்திற்கு உள்ளானது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் மண்டைதீவுச் சந்திக்கு வந்த இராணுவ வாகனத்தில் இருந்தே ஷெல் வீச்சு நடத்தப் பட்டதாக கரையோரப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஷெல் வீச்சு ஆரம்பமானதைத் தொடர்ந்து பாதுகாப்புக் கருதி குருநகர் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர். (உ-51)

## கொழும்பில் பதற்றம் ஏற்படுத்த விடுதலைப் புலிகள் முயற்சியாம்!

கொழும்பு, நவ. 22

கொழும்பு மாநகரில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை வானொலியின் சர்வதேச சேவையில் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் திட்டங்களை முறியடிப்பதற்கு ஒத்துழைப்புத் தரும்படி பாதுகாப்புப் படையினர் பொது மக்களைக் கோரியுள்ளனர் என்றும் —

கொழும்பில் பதற்றத்தை ஏற்படுத்தித் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டமிட்டுள்ளதாகவும் —

சாதாரண தமிழ் மக்களை பாதிப்படையச் செய்து தமது யுத்தத்தை நியாயப்படுத்துவதே அவர்களின் நோக்கம் என்றும் —

பாதுகாப்புப் படையினர் தெரிவித்ததாக அந்தவானொலிச் செய்தியில் குறிப்பிடப்பட்டது. (உ-எ)

## 1,200 பேருக்கு நாளை முதல் தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

தமிழீழ மீட்பு நிதிக்கடன் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரத்து 200பேருக்கான கடன் மீளளிப்பு வைபவங்கள் நாளை முதல் நடைபெறவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி அறிவித்துள்ளார்.

பிரிவு ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மீட்பு நிதி கடன் பத்திரதாரருக்கு அவர்களது மீட்பு நிதியை மீளளிப்புச் செய்யும் வைபவங்கள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

நாளை

★ நல்லூர், யாழ்ப்பாணம், கரைநகர், வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 1.45 மணிக்கு.

கோப்பாய் பகுதியைச் சேர்தவர்களுக்கு நீர்வேலி ப. நோ. கூ. சங்க கட்டடத்தில் மாலை 4.45 மணிக்கு.

புதன்கிழமை

★ உடுவில், தெல்லிப்பளை பகுதிகளைச் சேர்தவர்களுக்கு இணுவில் மத்திய கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கு.

★ மானிப்பாய், சங்கானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் மாலை 4.15 மணிக்கு.

வியாழன்

★ கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 1.15 மணிக்கு.

★ சாவகச்சேரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பிற்பகல் 3.45 மணிக்கும் மீட்புநிதி மீளளிக்கும் [illegible] இடம்பெறும். [illegible]

## கிளிநொச்சி முல்லைத்தீவில் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, நவ. 22

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு நீக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் நேற்று அறிவித்தது இலங்கை வானொலி நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் குறித்து அச்செய்தியில் ஏதும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

(உ-5)

## மன்னாரிலும் மாங்குளத்திலும் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், நவ. 22

மன்னார் மாவட்டம் பரப்புக்கடந்தான் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் 'புக்காரா' விமானம் ஒன்று குண்டு வீச்சை நடத்தியது. பல குண்டுகள் காட்டுப் பகுதியில் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

மாங்குளம் பகுதியிலும் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தியதாகவும், தாக்குதலினால் பயன்தரு மரங்கள் பல நாசமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5-15)

## ஜெரி சில்வாவின் பதவிக் காலம் நீடிப்பு

கொழும்பு, நவ. 22

இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் பதவிக்காலம் மேலும் ஓராண்டு காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அவரின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்தது. அது மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்படுவதை அடுத்து —

லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் ஓய்வு பெற்றதும் அவரது இடத்துக்கு இராணுவத் தளபதியாக ஜெரி சில்வா நியமிக்கப்படக்கூடும் என ஊகம் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## முச்சந்தி முரளி



இருபது வருஷத்தை ஓடவிட்டிட்டு இப்ப ஒரு இரவைப் பற்றிப் பேசுகினம்......!

## ஹெலி வேட்டு

சாவகச்சேரி, நவ. 22

நேற்று முற்பகல் 11 மணியளவில் பலாலியிலிருந்து ஆனையிறவை நோக்கிச் சென்ற ஹெலி ஒன்று கச்சாய் பகுதியை அண்டி வேட்டுக்களைத் தீர்த்தது. [illegible]

## மாவீரர் வாரம் நேற்று எழுச்சியுடன் ஆரம்பம்

### தமிழீழம் எங்கும் உணர்வுபூர்வ நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவம்பர் 22

தமிழீழ விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈந்து, சுதந்திரப் போராட்டத் தீயில் ஆகுதியான மாவீரர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் காலமான மாவீரர் வாரம், தமிழீழப் பிரதேசங்கள்எங்கும் புத்தெழுச்சி பொங்க உணர்வு பூர்வமாக நேற்று ஆரம்பமானது.

வட்டவை ரீதியில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுப் பந்தல்களிலும், பாடசாலைகள், திணைக்களத் தலைமையகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்களில் அமைக்கப்பட்ட மாவீரர் பந்தல்களிலும் நேற்றுக் காலை 9 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டதோடு மாவீரர்வார நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேசியக்கொடி ஏற்றப்பட்ட வேளையில் 'புலிகளின் குரல்' வானொலியில் தேசிய கீதம் ஒலிபரப்பப்பட்டது. வானொலியில் இருந்து தேசிய கீதம் ஒலிபெருக்கிகள் மூலம் பரப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வு கண்டுவிட முடியாது!

### ஐ.தே.கவின் நுவரெலியா மாநாட்டில் டி.பி. அறிவிப்பு

கொழும்பு, நவ 22

நாட்டில் பயங்கரவாதம் ஒரு பாரிய பிரச்சினையாகும். திடீரென்று ஒரே இரவில் இதற்குத் தீர்வு கண்டுவிட முடியாது. இதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைச் சிந்தித்தே எடுக்க வேண்டும்.

— இவ்வாறு கூறினார் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க.

நேற்று முன்தினம் நுவரெலியாவில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சி மாவட்டக் கிளையின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் —

இத்தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறும் என்ற நம்பிக்கை தமக்கு உண்டு என்றும் —

அங்கு ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அங்கு அவர் குறிப்பிட்ட மற்றைய முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரமாகத் தீர்வு காணப்படும்.

★ ஜனாதிபதித் தேர்தல் 1994 ஆம் ஆண்டு டிசம்பரில் திட்டமிட்டபடி நடத்தப்படும்.

★ நாடாளுமன்றத் தேர்தல் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்படும். (உ-எ)

## மக்களை வாக்களிக்கும்படி கிழக்கில் ராணுவம் மிரட்டல்

யாழ்ப்பாணம், நவ. 22

கிழக்கில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது என ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருப்பதை அடுத்து அங்கு தேர்தலை நடத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் உள்ள பல கிராமங்களுக்குச் செல்லும் படையினர் நடைபெறவுள்ள தேர்தலில் பங்குபற்றி வாக்களிக்க [illegible]டும் என தமிழ் மக்களை மிரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவித்தன.

கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு, மக்கள் ஓரிடத்துக்கு கொண்டுவரப்படுவதாகவும் —

பின்னர் இராணுவ அதிகாரிகள் அவர்கள் மத்தியில் வந்து, தேர்தல் தொடர்பாக இத்தகைய அச்சுறுத்தல்களை மக்களுக்குத் தெரிவிப்பதாகவும் கூறப்படுகிறது.

சின்னவத்தை என்னும் இடத்தில் உள்ள முகாமைச் சேர்ந்த படையினர் கடந்த 8 ஆம் திகதி நெடியவத்தை என்ற கிராமத்தை சுற்றிவளைத்தனர். பின்னர் அங்குள்ள மாரியம்மன் கோவிலில் கூடுமாறு மக்கள் பணிக்கப்பட்டனர். இராணுவ அதிகாரிகள் அங்கு கருத்தரங்கு ஒன்றை நடத்தினர்.

தேர்தல் நடைபெறும் போது 'யானை' சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என இராணுவ அதிகாரிகள் அப்போது மக்களுக்கு எடுத்துரைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்ற கருத்தரங்குகள் பல இடங்களிலும் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

37, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையில் 4 பரப்பு காணியுடன் 4 அறை வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. ஜெயராஜா, 94, ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணை. (6814)

## தவறிவிட்டது

நவாலிக்கும், ஆனைக் கோட்டை குருசு மதவடிக்கும் இடையில் 620751286V இலக்க அடையாள அட்டையுடன் பேர்ஸ் தவறிவிட்டது. எடுத்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரி செஞ்சிலுவைச் சங்க தொண்டர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். மார்க்கண்டு ஸ்ரீதர், நவாலி வடக்கு. (28133)

திருமதி சாமிநாதன் றோசவின், றோஸ் புனிதசீலி ஆகியோரது அடையாள அட்டைகள் 20-11-93 அன்று சின்னக்கடை சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 82, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (28123)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து, ரோகினி 3ஆம் பாதம், [கிரகபாவம் 48] வயது 23 பெண்ணுக்கும், சுவிற்சர்லாந்தில் தொழில் பார்க்கும் வயது 27, மூலம் 2ஆம் பாதம் ஆணுக்கும், தகுதியான மணமக்களை தந்தையார் எதிர்பார்க்கிறார். தொடர்பு: இல. 572, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28118)

## நிறைவேறியது

கொழும்பு, நவ. 22

1994 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றத்தில் 52 பெரும்பான்மை வாக்குகளால் கடந்த வெள்ளி நிறைவேற்றப்பட்டது. (த-எ)

## கீழ்மாடியில் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 22

விமானக் குண்டுத்தாக்குதலால் சேதமடைந்த யாழ். செயலகத்தின் மேல் மாடியில் இருந்த அலுவலகங்கள் கீழ் மாடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து சேதமடைந்த கீழ் மாடிப்பகுதிகள் அவசர அவசரமாக திருத்தப்படுகின்றன.

இதேவேளை கணக்குக் கிளை, தாபனக்கிளை என்பனவற்றில் தற்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன. (த-100)

## அபிவிருத்தி திட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 22

தற்போது கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்களை தமிழ் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உற்பத்திக் குழுக்கள் ஊடாக மேற்கொண்டு வருகின்றது.

கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் 77 குடும்பங்களுக்கு கோழிகளையும் 20 குடும்பங்களுக்கு மாடுகளையும், 223 குடும்பங்களுக்கு ஆடுகளையும் வழங்கியுள்ளதோடு அத்துடன் தொடர்புடைய வசதிகளையும் ஏற்படுத்தியும் கொடுத்துள்ளது.

இவற்றினை விட சமூக கட்டமைப்பு வேலைகளான வீதி அமைத்தல், புனரமைத்தல் குளங்கள், வாய்க்கால்கள் மறுசீரமைத்தல் போன்ற வேலைகளுக்கு பெருமளவு நிதியினை செலவிட்டு செயற்படுத்தியும் வருகிறது. (த)

## வீடுகள் வழங்க நடவடிக்கை

தென்மராட்சி, நவ. 22

அண்மைய ''யாழ்தேவி'' இராணுவ நடவடிக்கையின் போது பளை, அரசன் நகரில் இருந்து இடம்பெயர்ந்துள்ள 46 குடும்பங்களுக்கென தமிழர் புனர்வாழ்வுக்கழக பளைப் பிரிவினர் புலோப்பளை பிரதான சனசமூக நிலையத்திற்கு அருகில் வீடுகளை அமைத்து வருகின்றனர். (த-117)

# கண்ணீர் அஞ்சலி

## திரு. வி. பரமேஸ்வரசர்மா

அமரத்துவம் அடைந்த எமது முன்னாள் ஆசிரியர் திரு. வி. பரமேஸ்வரசர்மா அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.

1993-11-21 (28135)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணகத்தில்: 26 — 12 — 1926

விண்ணகத்தில்: 23 — 10 — 1993

அமரர்

## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(இளைப்பாறிய இ. போ. ச. உத்தியோகத்தர்)

''எங்கள் நெஞ்சங்களில் என்றும் அணையா விளக்காக ஒளிவீசிய தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி நிற்கிறோம்.''


எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், ஆறாத்துயரில் மூழ்கி இருந்த எமக்கு ஆறுதல் கூறி அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (22 - 11 - 1993) திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி சு. உருக்குமணி,
சகலன்மார், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். [28134]

# 15ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## வே. இ. தம்பிப்பிள்ளை (V. R. T)

(பிரபல வர்த்தகர், கிளிநொச்சி)

மண்ணில்: 22-11-1928

விண்ணில்: 22-11-1978

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாக கொண்ட வே. இ. தம்பிப்பிள்ளையவர்களது 15 ஆவது ஆண்டு நினைவு நாளான இன்று 22 - 11 - 93 அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் என்றும் அமைதி பெற்று சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காலயுத்தி ஆண்டு கார்த்திகையாறாந்திகதி காலஞ்சென்ற புதன் அட்டமியில் - கோலமார் மன்னாம் தம்பிப்பிள்ளை மண்ணுலகை விட்டகன்று மன்னினான் விண்ணுலகை மதித்து.

மனைவி, மக்கள், மருமக்கள்;
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்,
நண்பர்கள், ஸ்தாபன சிப்பந்திகள்.

இல: 175,
முதலாம் குறுக்கு தெரு,
யாழ்ப்பாணம். (28132)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய

# பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்

எதிர்வரும் 05 - 12 - 1993 ஞாயிறு காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்திற்கு சமூகம் தரும்படி கல்லூரியின் அனைத்துப் பெற்றோர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரை அன்புடன் அழைக்கிறோம்.

- அதிபர்.

[சி-6382]

# கண்ணீர் பூக்கள்

எமது ஆசிரிய பெருந்தகையின் மைந்தன்

## குழந்தைவேலு சத்தியேந்திரா

2 ஆம் லெப். சிவகுமாரன்

தமிழன்னை பெற்றெடுத்த வீரமைந்த
உன் வீரம் எம் நெஞ்சில்
வித்தாக இடப்பட்டு
விழுதாக வளர்ந்து.....

இம்மாவீரர் நாளில் உன்னோடு வீரச்சாவு எய்திய மாவீரர்களுக்கும் எம் கண்ணீர் பூக்களை செலுத்துகின்றோம்.

கலைப்பீட 1 ஆம் வருட
வெளிவாரி மாணவர்கள்,
(யாழ். பல்கலைக்கழகம்)

புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம். (சி-6383)

# அந்தியேட்டி அழைப்பு

மண்ணில்: 17 — 10 — 1918



விண்ணில்: 23 — 10 — 1993

## கார்த்திகேசு வைத்திலிங்கம்

(மாரீசன்கூடல், இளவாலை)

23 — 10 — 1993 இல் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டி, சபிண்டீகரணம் இன்று (22 - 11 - 1993) திங்கள் பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நிகழவிருப்பதால் அத்தருணம் சமுகந்தந்து அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

178/1, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (28120)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 01 1931



மறைவு: 04 11

அமரர் சங்கரன் சபாரத்தினம்

(பிரபல வர்த்தகர்)

என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மகள்: இந்திரா,
மருமகன்: இரத்தினம்,
மகள்: இந்திராசா, (சுவிஸ்)
மருமகள்: விஜயகுமாரி,
பேரப்பிள்ளைகள்: சாந்திராஜ், திசா.

(28124)

கச்சேரியிலும் நந்தாவிலிலும்

# விமானக் குண்டு வீச்சுகளில் காயமுற்ற இருவர் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 22

கடந்த 12 ஆம் திகதி யாழ். கச்சேரியிலும், 13 ஆம் திகதி கொக்குவில் நந்தாவிலிலும் இடம்பெற்ற சுப்பர் சொனிக் விமானக் குண்டு வீச்சுகளின் போது படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் இருவர் மரணமடைந்தனர்.

கச்சேரியில் நிகழ்ந்த குண்டு வீச்சின் போது காயமடைந்தவர்களில் யாழ்ப்பாணம் மடம் வீதியைச் சேர்ந்த குசை வின்சன் (வயது 55) என்பவரும் —

நந்தாவிலில் இடம்பெற்ற குண்டு வீச்சில் காயமடைந்தவர்களில் செல்லையா சேனாதிராசா (வயது 69) என்பவரும் மரணமானவர்களாவர்.

இவர்களுடன் கச்சேரி சம்பவத்தில் இருவரும், நந்தாவிலில் இருவருமாக இறந்தோரின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது. (உ-15)

# யுத்தச் செலவின் மத்தியிலும் அரச எம்.பிக்களுக்கு சலுகை

## சு. க. உறுப்பினர் சொல்கிறார்

கொழும்பு, நவ 22

நாடாளுமன்றத்தில் உள்ள 125 ஐக்கிய தேசியக்கட்சி எம். பிக்களின் சபாநாயகர், உபசபாநாயகர் மற்றும் குழுக்களின் தலைவர் ஆகியோர் நீங்கலாக, எஞ்சியோர் அமைச்சர்களுக்கான சலுகைகளை அனுபவித்து வருகின்றனர்.

சுதந்திரக் கட்சி எம். பி. நிச்சர்ட் பத்திரான பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். பணியாளர்கள், உத்தியோகபூர்வ வாகனம், வரையறையற்ற எரிபொருள் முதலான சலுகைகளை இவர்கள் பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, யுத்தத்துக்கான பாதுகாப்புச் செலவீனம் அதிகரிப்பு — இவற்றுக்கு மத்தியில் எம். பிக்களுக்கு ஏராளமான சலுகைகளை அரசு அள்ளிக் கொடுத்து இருப்பது முற்றிலும் அநியாயமானது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஐ.நா.செயலரின் பிரதிநிதி இலங்கை விஜயம்!

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான ஐ.நா. பொதுச் செயலாளரின் விசேட பிரதிநிதி பிரான்சிஸ் டெங் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அண்மையில் இலங்கை வந்திருந்தார். என இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

இவர் இங்கு தங்கியிருந்த காலத்தில் புத்தளம், அநுராதபுரம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கும் மீள்குடியேற்றப்பட்டுள்ள கிராமங்களுக்கும் விஜயம் செய்தார்.

திரு. டெங் பின்னர் வெளியுறவு அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீதைச் சந்தித்துப் பேசினார். (த-எ)

பாலர் பாடசாலை ஆசிரியருக்கு

# யாழ். மாநகரசபை நடத்தும் ஒருமாத பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், நவ. 22

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு மாத பயிற்சி நெறி ஒன்றை யாழ். மாநகரசபை நடத்தவுள்ளது.

இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களால் நடத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தமது சனசமூக நிலையங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்படி பயிற்சி நெறியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரை வழங்குவர். (த-5)


பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

## கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாட நெறிகளுக்கான விரிவுரைகள் 05 - 12 - 1993 இல் ஆரம்பமாகின்றன.

- கலைமாணி B. A.
- விஞ்ஞான மாணி B. Sc. (புவியியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 02 — 12 — 1993

விண்ணப்பப் படிவத்தினையும் விவரத் திரட்டினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ கடந்த 15 வருடங்களாக வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ். நகரில் இதுவே. [சி-6506]


# கண்ணீர் அஞ்சலிகள்

## எம். எஸ். வின்சன்

குருநகர் சந்தை முதலாம் நம்பர் மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர் எம். எஸ். வின்சன் காலமானார்.

அன்னாரின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அஞ்சலிகளையும், அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடை
உரிமையாளர்கள்,
யாழ். மாவட்டம்.

(28143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயம்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மதத் தலைவர்களின் கனதியான மகஜர்

வடபகுதியில் அரச விமானப் படையினர் நடத்திவரும் கண்மூடித்தனமான, காட்டுமிராண்டித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்கள் குறித்து யாழ்ப்பாணத்திலிருந்து சர்வ மதத் தலைவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் மிகவும் கனதியானது.

தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்கம் — அரச படைகள் — நடத்தும் அட்டூழியங்கள் குறித்து அரசுத் தலைவருக்கு அனுப்பப்படும் மகஜர்களை விட அது மிகவும் வித்தியாசமானது. அரசின் கொடுமைகளைக் கண்டிப்பது, ஆட்சேபம் தெரிவிப்பது, நிவாரணம் அல்லது நட்டஈடு கோருவது என்ற வழமையான மகஜர்களுக்கு அப்பாற்பட்டுச் சென்றிருக்கிறது சர்வ மதத் தலைவர்களின் மகஜர்.

சர்வ மதத் தலைவர்களின் அந்த மகஜர் வருத்தம் தெரிவிப்பதோடும், கண்டிப்பதோடும், சம்பவங்களையும், பாதிப்புகளையும் எடுத்துச் சொல்வதோடும் மட்டும் நிற்கவில்லை. அரசாங்கம் தமிழர்கள் மீது புரியும் மனிதப் பண்புக்குப் புறம்பான, முரணான கொடுமைகளால் உண்டாகும் அவலங்களை, துன்பங்களை மட்டும் எடுத்துச் சொல்லவில்லை. அரசின் நாட்டாண்மைத் தனத்தால் தமிழர்களின் அரசியல் நிலை எத்தளவுக்குப் பாதிப்புக் கண்டுள்ளது என்பதனை ஆணித்தரமாகவும், துணிச்சலோடும் மதத்தலைவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

அரசாங்கம் தமிழர்கள் மீது கடந்த பல வருடங்களாகக் கட்டவிழ்த்து விட்டுள்ள அரச பயங்கரவாதத்தை அடித்துக் கூறும் வகையில் அந்த மகஜர் அமைந்துள்ளது. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று வர்ணித்து வரும் விஜேதுங்காவின் முகத்தில் அறைவது போல, அரசு தமிழர் மீது நடத்துவது தான் பயங்கரவாதம் என்று மதத் தலைவர்கள் தர்க்க ரீதியாக எடுத்துச் சொல்லியுள்ளனர்.

பொது நிறுவனங்கள், தமிழ்ப் பொது மக்கள் மீது மட்டுமன்றி அரச நிறுவனங்கள், அரசாங்க அதிகாரிகள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவது பயங்கரவாதமே அன்றி வேறல்ல. அது, தமிழ்ப் பகுதிகளின் நிர்வாக உரிமை தனக்கு வேண்டாம் என்று தூக்கி வீசுவதற்கு ஒப்பானது.

இதனை சர்வமத தலைவர்களின் மகஜர் மிக வெளிப்படையாகவும் காத்திரமாகவும் எடுத்துச் சொல்கிறது. தமிழர்களை ஆளும் தார்மீகப் பொறுப்பை ஸ்ரீலங்கா அரசாங்கம் இழந்து விட்டது என்ற உண்மையை துணிச்சலுடன தெரிவித்திருக்கிறார்கள் அவர்கள்.

மக்கள் இம்சிக்கப்படும் போது அவர்கள் சார்பில் மதத்தலைவர்கள் ஒன்று சேர்ந்து துணிச்சலுடன், உண்மையை ஓங்கி ஒலிக்கக் கடமைப்பட்டவர்கள். அந்தக் கடமை இம்முறை சரிவர செய்யப்பட்டதை உணர முடிகிறது.

இந்த மகஜர் விஜேதுங்காவுக்கு மட்டும் உரியதல்ல. உலக நாடுகளின் தலைவர்களுக்கு, சர்வதேச அமைப்புகளுக்கு சர்வமத அமைப்புகளுக்கு, சர்வதேசப் பத்திரிகைகளுக்கு மற்றும் சர்வதேச தொடர்பு சாதனங்களுக்கு இந்த மகஜரின் பிரதிகள் உடனடியாக அனுப்பப்பட வேண்டும்.

அப்போது தான் தமிழர்கள் நடத்துவது பயங்கரவாதமல்ல உரிமைப் போராட்டமே என்பதனை உலகத்துக்கு உணர்த்த உதவும். தமிழர்கள் மீது பயங்கரவாதத்தை ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்து விடுவதால் அவர்களை ஆளும் உரிமை அதற்கு இல்லை என்பதனை எடுத்துச் சொல்ல முடியும்.

கொழும்பு அரசு பயங்கரவாதம் மூலம் தமிழ் மக்களை அழிப்பதால், தமிழர் பிரதேசத்தை அது வேறு நாடாகவே கருதுகிறது. அதனால் தமிழர்கள் தமது நாட்டை ஆள உரித்தளிக்கப்பட வேண்டும் என்பதும் சர்வதேச ரீதியாக எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

---

50 வருடங்களின் பின்

# இந்தியா-தென் ஆபிரிக்கா ராஜதந்திர உடன்பாடு!

### இன்று கைச்சாத்தாகும்

புதுடில்லி, நவ. 22

50 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தடவையாக இந்தியா, தென் ஆபிரிக்காவுடன் ராஜதந்திர உறவை ஏற்படுத்திக் கொள்கிறது.

இது சம்பந்தமான ராஜதந்திர உடன்பாடு ஒன்று புதுடில்லியில் இன்று திங்கள் இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களினாலும் கைச்சாத்திடப்படுகிறது.

இதற்காக தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக் போத்தா இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

நிறவேற்றுமையை ஒழிக்கும் புதிய அரசமைப்பு ஒன்றை தென் ஆபிரிக்காவில் உள்ள கறுப்பு மற்றும் வெள்ளை இனத்தவர்களின் அரசியல் கட்சிகள் கடந்த வாரம் கைச்சாத்திட்டனர் என்பது தெரிந்ததே.

அதன் பின்னர் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருப்பது ராஜதந்திர முக்கியத்துவம் பெறுகிறது. (த-எ)

## விவசாயிகள் ஓய்வூதியம்; 44 பேர் தெரிவாகினர்

யாழ்ப்பாணம், நவ. 22

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 116 விவசாயிகளில் 44 பேர் சென்ற ஏப்ரல் மாதம் வரை ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 26 பேருக்கு தற்போது ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 11 பேர் தமது உறுப்புரிமையை புதுப்பித்து ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக உள்ளனர்.

இவர்களுக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்க கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்டக் காரியாலயம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ-162)

## மந்திகை ஆஸ்பத்திரியின் ஜெனரேற்றர் செயலிழந்தது

### தண்ணீர் விநியோகமும் இல்லை

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையின் பிரதான ஜெனரேற்றர் முற்றாக செயலிழந்துள்ளதாகவும், இதனால் கடந்த 6 நாட்களாக வைத்தியசாலைக்கான தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் தண்ணீர்த் தாங்கியில் நீரைச் சேமித்து பின்னர் குழாய் மூலம் நீர் விநியோகம் இடம்பெற்று வந்தது. ஆனால் ஜெனரேற்றர் பழுதடைந்ததை அடுத்து தற்போது பலத்த சிரமத்தின் மத்தியில் கிணற்றில் இருந்தே நீர் பெறப்படுகின்றது.

இதேவேளை வைத்திய உபகரணங்களில் இருந்து தொற்று நோய்களை அகற்றும் வேலைகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-173)

## விவசாய பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ 22

கமநீர் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயிகளுக்காக நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் நாளை செவ்வாய்க்கிழமை தொல்புரம் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புகள் காலை 9 30 மணிக்கு சுழிபுரம் வீரபத்திரர் கோவிலடியிலும்—

கைதடி பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கான வகுப்புகள் அன்று காலை 10 மணிக்கு கைதடி வடக்கு பாலர் பாடசாலையிலும் நடைபெறும். (த)

## நடமாடும் வைத்திய சேவை விஸ்தரிப்பு!

வலிகாமம் தெற்கு, நவ 22

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், யாழ்ப்பாண மாவட்டத்தில் தமது நடமாடும் வைத்திய சேவையினை விரிவுபடுத்தி செயற்பட்டு வருகின்றனர்.

இந்நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல்வேறு அகதி முகாம்களுக்கும் சென்று வைத்திய சேவையை அளித்து வருகின்றனர். (த-152)

## மண்டேலாவின் மனைவி பயணம் செய்த கார் மீது சூடு

### சாரதி பலி! 'வின்னி' தப்பினார்!!

ஜோஹன்னஸ்பர்க், நவ 21

தென்ஆபிரிக்கக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவின் மனைவி பயணஞ் செய்த கார் மீது இனந்தெரியாத மனிதன் ஒருவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான்.

காரின் சாரதி கொல்லப்பட்டார். வின்னி மண்டேலா உயிர் தப்பினார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

வின்னி மண்டேலாவின் மெய்ப்பாதுகாவலருமாக இருந்த காரின் சாரதி, குண்டுபட்டு உயிரிழப்பதற்கு முன்னர், துப்பாக்கி மனிதனைச் சுட்டுக் கொன்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

வின்னி மண்டேலா, நெல்சன் மண்டேலாவை பிரிந்து வாழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிரந்தர நியமனம்

கொழும்புத்துறை, நவ. 22

வலி. தென் மேற்கு பிரதேச சபையில் கடந்த பல வருடங்கள் தற்காலிகமாகக் கடமையாற்றி வந்த பதினொரு ஊழியர்களுக்கு பொது நிர்வாக அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 14/93 இன் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-30)

சட்டசபைத் தேர்தல்களில்

## பாரதீய ஜனதா அமோக வெற்றியீட்டும் வாய்ப்பு

புதுடில்லி, நவ. 22

அண்மையில் நடந்த புதுடில்லி சட்டசபைத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு அமோக வெற்றி கிடைக்கும் என்றும் —

ராஜஸ்தான் மாநில சட்டசபைத் தேர்தலில் பாதிக்கு மேற்பட்ட ஆசனங்களை பாரதீய ஜனதாக் கட்சி கைப்பற்றும் என்றும் 'இந்தியா ருடே' நடத்திய கருத்துக் கணிப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

வட இந்தியாவில் நரசிம்மராவ் அரசினால் கலைக்கப்பட்ட 4 மாநிலங்களுக்குமான சட்டசபைத் தேர்தல்களில் மீண்டும் பாரதீய ஜனதா கட்சியே ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு இருப்பதாகவும் அக் கருத்துக் கணிப்பில் மேலும் தெரியவந்துள்ளது.

இமாசலப் பிரதேச சட்டசபையை பாரதீய ஜனதாவிடம் இருந்து இந்திராகாங்கிரஸ் கைப்பற்றக் கூடிய சூழ்நிலை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் இந்திரா காங்கிரஸுக்கு முஸ்லிம் மக்களிடையே கணிசமான ஆதரவு இன்னும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் மாநில சட்டசபையில் உள்ள 425 தொகுதிகளுக்கான தேர்தலின் முதல் கட்ட வாக்களிப்பு கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

இம் மாநில சட்டசபைகளின் தேர்தல்களில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படுவது இம் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. (இ-எ)

மாவீரர் எழுச்சி வாரம்;

## கோட்ட மட்டத்தில் இன்று நடக்கும் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 22

மாவீரர் வாரத்தை ஒட்டி கோட்ட ரீதியாக கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் நான்கு கோட்டங்களிலும் உள்ள வட்டவை பிரிவுகளில் இன்று திங்கள் கூட்டங்கள் நடைபெறவுள்ள இடங்களும் நேரங்களும் வருமாறு:

★ வலிகாமம் — கோப்பாய் வட்டத்தில் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியிலும்— உடுவில் தெல்லிப்பளை வட்டத்தில் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் முன்றிலிலும் இரவு 7-30 மணிக்கு.

★ தென்மராட்சி— பளை வட்டத்தில் புலோப்பளை அ. த. க. பாடசாலையில் இரவு 8 மணிக்கு

★ வடமராட்சி — உடுப்பிட்டி வட்டத்தில் கம்பர்மலை பாரதி ச. ச. நிலையத்தில் இரவு 7மணிக்கு

★ தீவகம் — நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இரவு 7-30 மணிக்கு

கடற்புலிகள்

யாழ். மாவட்ட கடற்புலிகளின் ஏற்பாட்டில் வலிகாமம் வடக்கு வட்டத்தில் மூளாய் பிள்ளையார் கோவிலடி பிரசாத் கலையரங்கிலும், வடமராட்சி வடக்கு வட்டத்தில் பருத்தித்துறை பஸ் நிலையம் அருகிலும் இரவு 7மணிக்கு கூட்டங்கள் நடைபெறும். (த)

## மாவீரர் எழுச்சி வார வேலைத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 22

மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி வட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களில் இன்று நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு;

நல்லூர் வட்டம் - காலை 10-30 மணிக்கு திருநெல்வேலி மத்தி வடக்கு பாற்பண்ணை வீதி, ஆணித் தொழிற்சாலை முதல் மயானம் வரையான பற்றைகள் வெட்டுதல், பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி மேற்கு பரவைக் குளத்தைச் சுற்றியுள்ள அணைக்கட்டுகளில் பனம் விதைகள் நடுதல், டயஸ் வீதி துப்புரவு செய்தல்.

சண்டிலிப்பாய் வட்டம் — காலை 9 மணிக்கு மானிப்பாய் மேற்கு வெள்ளவாய்க்கால் துப்புரவு செய்தல்.

உடுவில் வட்டம் — காலை 9 மணிக்கு உடுவில் வடக்கு நாச்சிமார் கோயிலடி குள சுற்றாடல் துப்புரவு செய்தல்.

சங்கானை வட்டம் — காலை 9 மணிக்கு சங்கானை மேற்கு கொவ்வரிகுள வாய்க்கால் துப்புரவு செய்தல், தொல்புரம் மேற்கில் மரம் நடுகை செய்தல். (த)

## 'கொலரா'வின் பாதிப்பை விளக்கி தெருக் கூத்துக்கள்

யாழ்ப்பாணம், நவ. 22

மக்களுக்கு வாந்திபேதி நோய் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இதனால் ஏற்படும் அபாயத்தை மனதில் பதிய வைக்கும் நோக்கில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் கொலரா தொடர்பான தெருக்கூத்துகள் நடைபெற்று வருகின்றன.

ஆனைக்கோட்டை, நவாலி, சுதுமலை போன்ற கொலரா அதிகம் பரவி வரும் பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களில் இவ்வாறான தெருக்கூத்துக்கள் தினமும் நடைபெற்று வருகின்றன. தெருக்கூத்து நடைபெறும் இடங்களில் சுகாதாரக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (த-162)

## நூலக, தகவல் விஞ்ஞான முதல் நிலைப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், நவ. 22

இலங்கை நூலகவியல் சங்கத்தால் நடத்தப்படும் நூலகவியல் தகவல் விஞ்ஞான முதல் நிலைப் பரீட்சைகள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 30 ஆகும்.

ஆண்டு தோறும் நடத்தப்படும் இப் பரீட்சை கடந்த 1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடபகுதியில் நடைபெறவில்லை. இதனால் 1990ஆம் ஆண்டு பரீட்சைக்குப் பதிவு செய்த மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போனது.

இம் முறை பரீட்சை இங்கு நடைபெறவிருப்பதால் 1993 ஆம் ஆண்டுக்கு விண்ணப்பித்த மாணவர்களுடன், 1990ஆம் ஆண்டு விண்ணப்பித்த மாணவர்களுக்கும் ஒன்றாகப் பரீட்சை நடைபெறும் என்று யாழ் மாவட்ட நூலகவியல் சங்க இணைப்பாளர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (த-15)

## மீன்பிடி அபிவிருத்தி: ஆசிய வங்கி உதவி வழங்கும்

நாட்டில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் ஆறு ஆண்டு கால திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 2கோடி 60லட்சம் அமெரிக்க டொலரை வழங்க உள்ளது.

மீன்பிடியை அதிகரிப்பது, மீனவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தெரிவு செய்யப்பட்ட சில மீன்பிடித்துறைமுகங்கள் புனரமைப்புச் செய்யப்பட உள்ளதுடன் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைளும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். (த-எ)

## ஐரோப்பாவில் இன மோதல்கள்

உலகின் பல பகுதிகள் தற்போது இன மோதல்களின் கொந்தளிப்புப் பிரதேசங்களாக இருந்து வருவது பற்றிய கட்டுரை ஒன்று கடந்த 18ஆம் திகதி உதயனில் பிரசுரமாகியிருந்தது

ஆசியாவிலும் (இலங்கை நீங்கலாக) லத்தீன் அமெரிக்காவிலும் இடம்பெற்றுவரும் இன மோதல்கள் பற்றிய தகவல்கள் அக்கட்டுரையில் பிரசுரமாகியிருந்தன.

ஐரோப்பாவில் இனமோதல்கள் இடம்பெறுவது பற்றிய தகவல்கள் இங்கே பிரசுரமாகுகின்றன.

மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா, சகாராவுக்கு தெற்கில் உள்ள ஆபிரிகப் பகுதி ஆகியவற்றில் இடம்பெறும் இனமோதல்கள் பற்றிய விவரம் பிறிதொரு தினத்தில் பிரசுரமாகும்.

### பொஸ்னியா ஹேர்சிகோவினா

சேர்பியப் படைகள் முன்னைய யூகோஸ்லேவியாவின் சுமார் 70 வீதத்தைக் கைப்பற்றியுள்ளன. ''இனச் சுத்தப்படுத்தல்'' இயக்கம் ஒன்றில் முஸ்லிம்களையும் குரோசியர்களையும் அவை வெளியேற்றியுள்ளன அல்லது கொன்றுள்ளன. ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர். 15 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

### குரோசியா

சேர்பிய பிரிவினைவாதிகள் குரோசியாவின் மூன்றில் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்துகின்றனர். 1991இல் குரோசியா சுதந்திரப் பிரகடனம் செய்தது முதல் 25 ஆயிரம் பேர் இறந்துள்ளனர்.

### ஸ்பெயின்

முப்பது லட்சம் பாஸ்க் இனத்தவரைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் தேசியவாதிகள் ஸ்பெயின், பிரான்ஸ் எல்லையில் சுதந்திர அரசு ஒன்றை அமைக்கப் போராடுகின்றனர். 1968 முதல் ஸ்பெயினில் 717 பேர் இறந்துள்ளனர்; பிரான்சில் 49 பேர் இறந்துள்ளனர்.

### பிரிட்டன்

வட அயர்லாந்திலுள்ள புரட்டஸ்தாந்து மதப் பெரும்பான்மையினர் தொடர்ந்து பிரிட்டனுடன் யூனியனாக இருக்க [illegible] கத்தோலிக்க சிறுபான்மையினர் அயர்லாந்துடன் சேர விரும்புகிறார்கள். 1961 முதல் பிரிட்டிஷ் துருப்புகள், புரட்டஸ்தாந்து இராணுவத் துருப்புகள், அயர்லாந்து குடியரசு இராணுவம் ஆகியவற்றுக்கிடையிலான போரில் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

### ஜேர்மனி

கடந்த இரு ஆண்டுகளில் ஆறரை லட்சம் அகதிகள் பல்கேரியா, ருமேனியா, பல்கன் மற்றும் பிரதேசங்களில் இருந்து ஜேர்மனிக்குள் புகுந்துள்ளனர். ஜேர்மன் அதிகார வட்டாரங்களின்படி வலதுசாரி, நவ-நாசிக் குழுக்கள் கடந்த ஆண்டு இரண்டாயிரத்துக்கும் மேலான தாக்குதல்களை நடத்தின. 17 பேர் மரணமடைந்தார்கள்; அறுநூறுக்கு அதிகமானோர் காயமுற்றார்கள்.

### ருமேனியா

ருமேனியாவின் றான்சில்வேனியாவில் அநேகமாக வாழும் ஹங்கேரி இனத்தவர் கூடுதலான சுயாட்சியையும் தமது பிள்ளைகளுக்கு தமது மொழியில் கல்வி போதிக்கும் உரிமையையும் கோருகின்றார்கள். ஜிப்சி இனத்தவர் மீது அடிக்கடி தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

### ரஷ்யா

செச்சென், இங்குஷெட்டியா ஆகியன பிரிந்து ரஷ்யாவுக்குள்ளே கூடுதலான சுயாட்சியைக் கோருகின்றன. அதேவேளை இங்கு ஷெட்டியா [illegible] வும் பிரதேசச் சண்டையில் [illegible] முன்னூறுக்கு அதிகமானோர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

### மொல்டோவா

மொல்டோவாவின் ருமேனிய மக்கள் ருமேனியாவுடன் பொருளாதார, அரசியல், கலாசார உறவுகளை நாடி நிற்கின்றனர். கிழக்கு மொல்டோவாவில் உள்ள டிநியெஸ்ரர் பிரதேசத்தில் கூடுதலாக ரஷ்யர்களும் உக்ரேனியர்களும் வாழ்கிறார்கள். மொல்டோவா ருமேனியாவுடன் சேர்ந்து விடும் என்று அஞ்சி இவர்கள் 1990 இல் சுதந்திரப் பிரகடனம் செய்தார்கள். எண்ணூறுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்; சுமார் நாலாயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

தொகுப்பு:

**- பாரதிநேசன் -**

### ஜோர்ஜியா

முஸ்லிம்கள் கூடுதலாக வாழும் அப்காஷியா சுதந்திரம் கோருகிறது அல்லது ரஷ்யாவுடன் சேர விரும்புகிறது. இதற்கான போரில் 700முதல் 1,500 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர்; 80 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். முஸ்லிம்கள் கூடுதலாக வாழும் தென் ஒஸ்ஸெற்றியாவும் ரஷ்யாவில் உள்ள ஒரு சுயாட்சிக் குடியரசான வட ஒஸ்ஸெற்றியாவுடன் சேர விரும்புகிறது. 1,500க்கு அதிகமானோர் இறந்துள்ளனர். ★

## தமிழரின் போராட்டத்துக்கு சிங்கள அரசுகளே காரணம்

### சர்வமதகுருமார் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், நவ 22

தேவாலயங்கள், மருத்துவமனைகள், செயலகம் போன்ற இடங்கள் மீது ஸ்ரீலங்கா படையினர் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான வன்முறைத் தாக்குதல்களை கண்டிப்பதுடன், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதையும் கண்டிக்கின்றோம். தற்போதைய போராட்டத்திற்கு தமிழரின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதும், தொடர்ந்து வந்த சிங்கள அரசுகளின் வன்முறையுடன் கூடிய அணுகுமுறைகளுமே காரணம்.

இவ்வாறு தெரிவிக்கும் மகஜர் ஒன்றை யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வமத குருமார்கள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஏற்கனவே ஜனாதிபதிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகத்தினால் தனியான கண்டன அறிக்கையும், யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வமதத் தலைவர்கள் ஒப்பமிட்ட கண்டன அறிக்கையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்டன அறிக்கைகளின் பிரதிகள் கொழும்பில் உள்ள பத்திரிகை நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு மத அமைப்புக்கள், தூதராலயங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வி சோபிதமலர் சின்னத்தம்பி

செல்வி சோபிதமலர் சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆரம்ப பிரிவு மேற்பார்வையாளர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி). 21 - 11 - 93 கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்தார்.

இவர் காலஞ்சென்ற விக்டர் கிருபராஜ், ரெஜி, அமுதா சின்னத்தம்பி (இளைப்பாறிய தபால் தந்தி திணைக்கள மேற்பார்வையாளர்), வண. எஸ். எல். கருணைராஜ் (மெதடிஸ்த திருச்சபை), கருணாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராணி, வினி, தேவி, காலஞ்சென்ற தொமஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகன்யா, சுதர்ஷன், அமேஷா, மெஸ்ரிக்கா, பிரில்க்கா, தர்ஷினி, சஞ்ஜீவன், நிஷாந்தி, நிஷாந்தன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
அமுதா சின்னத்தம்பி

71, றக்கா வீதி,
சுண்டிக்குளி.
(28141)

## கார்த்திகேசு சின்னத்துரை

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஒட்டுமடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான கார்த்திகேசு சின்னத்துரை பிரான்ஸில் காலமானார். அன்னார் கார்த்திகேசு பாக்கியத்தின் அன்பு மகனும், செந்தமிழ்செல்வியின் அருமைக்கணவரும், தட்சாயினியின் அன்பு தந்தையும், நடராஜா பரமேஸ்வரியின் மருமகனும், புவனேஸ்வரி, தில்லைநாதன், சுந்தரலிங்கம், இராமச்சந்திரன், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, ரவிச்சந்திரன், நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் தமிழ்செல்வன், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வி. நடராஜா.

இல. 189 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(28138)

## திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை

திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை (புலோலி முத்து) காலமாகிவிட்டார். அன்னார் யாழ். மாநகர சபையின் முன்னாள் பிரதம எழுதுவினைஞர் A. B. மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், ஜெயவதி, அன்ரன்ஜெயகுமார் (கணக்காய்வாளர், கணேசலிங்கம் அன்கோ), ஜெயராணி, ஜெயநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், அலெக்சாண்டர் (சமுத்திரா றேட்ஸ்), யேசுதாசன், யோகரட்ணம், ஜொய்சி நிர்மலா ஆகியோரின் அன்புமாமியாரும், யேம்ஸ்றூபன், அனிஸ்ரா, சாம் றாஜன், ஜெனிற்றா, றுக்மன், லக்ஸ்மன், நிரோஜன், டெஸ்மன், ஜான்சி, சுகந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (22 - 11 - 1993) இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் பலியின் பின் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
A. B. மரியாம்பிள்ளை.
[கணவர்]

30, புனித யுவானியார் கோவில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(28140)

## அரியநாயகம் சற்குணநாயகம்

அரியநாயகம் சற்குணநாயகம் காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி லில்லிமலரின் அன்புக் கணவரும், அருட்திரு. ரெரன்ஸ் (மெதடிஸ்த ஆலயம் வண்ணார்பண்ணை), சுபோஜினி, நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை கொழும்பில் நடைபெற்றது. இன்று (22 - 11 - 1993) காலை 10-00 மணிக்கு மெதடிஸ்த ஆலயம் வண்ணார்பண்ணையில் நினைவு வழிபாடு நடைபெறும்.

தகவல்:
அருட்திரு. S. S. ரெரன்ஸ்
(மகன்)
(28142)

## நயினை சுப்பர் மயில்வாகனம்

நயினாதீவு 4ஆம் வட்டாரம் சுப்பர் மயில்வாகனம் 20 - 11 - 93 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் பார்வதியின் அன்புக்கணவரும், சிவானந்தராசா (சுவிஸ்), சியாமளாதேவி (அனலைதீவு வைத்தியசாலை), லலிதாதேவி, நிர்மலாதேவி, காலஞ்சென்ற இரஞ்சனாதேவி மற்றும் சுலோசனாதேவி, ஸ்ரீஸ்கந்தராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நாகமுத்து, காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பராசக்தி, கண்மணி, பொன்னுத்துரை ஆகியோரின் பிரிய சகோதரரும், காலஞ்சென்ற இராமனாதர்-பொன்னாச்சி தம்பதிகளின் மருகரும், புவனேஸ்வரி, கிருஷ்ணபிள்ளை, பரராசசிங்கம், தயாவதி, திலகவதி, கிருஷ்ணவதி ஆகியோரின் மைத்துனரும், தில்லைநடராசா, கற்பகவடிவு (சுவிஸ்), திருச்செல்வம், இராசலிங்கம் (கனடா), சிவனேசன் ஆகியோரின் மாமனாரும், விக்னராசா, அனுஷா, விஜிதா, விமல், சுகந்தினி, அமுதினி, சுதர்சன், திவ்யகாந், அனுஷா, விசாகினி ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22-11-93) திங்கட்கிழமை கனத்தை மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி நிர்மலா - இராசலிங்கம்.
(மகள்)

''பழமுதிர்சோலை'',
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(28139)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22 - 11 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## புலிகளின் நடவடிக்கை குறையவில்லையாம்

சென்னை, நவ. 22

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறையவில்லை; இன்னும் மறைமுகமாக இருந்து வருகிறது.

தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி திருச்சியில் செய்தியாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார். (த-எ)

## அளவெட்டியில் துப்பாக்கி வேட்டு

அளவெட்டி, நவ. 22

அளவெட்டி சீனன் கலட்டி பாடசாலையில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் நேற்று அதிகாலை வரை தொடர்ந்து அடிக்கடி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவண்ணம் இருந்தனர். இதனால் அப்பிரதேசத்தை அண்டிய பகுதியில் வசித்த மக்கள் பெரும் பதற்றத்துடன் இரவைக் கழித்தனர். (உ-13)

## ஊக்குவிப்பு

தென்மராட்சி, நவ. 22

பளைப் பகுதியில் சோளன் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு இப்பகுதி விவசாயிகளுக்கு பளைப் பகுதி விவசாய சேவை நிலையத்தினர் சோளன் விதைகளை வழங்கி உள்ளனர். (த-117)

## நீர்கொழும்பு கடற்பகுதியில் கண்காணிப்பு

கொழும்பு, நவ. 22

நீர்கொழும்புக் கடலில் விடுதலைப் புலிகளின் படகுகளின் நடமாட்டம் இருப்பதான தகவல்கள் குறித்து முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை நீர்கொழும்புப் பொலீசார் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு கடலில் கண்காணிப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன. (த-எ)

## இன்று

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் நீர்வேலிக் கொத்தணியினரின் 'புதிய பூமி' என்னும் கையெழுத்துச் சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று காலை 9. 30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

## மசிடோனியாவில் விமான விபத்து! 115 பேர் பலி!!

ஜெனிவா, நவ. 22

முன்னாள் யுகோஸ்லேவியக் குடியரசான மசிடோனியாவில் பயணிகள் விமானம் ஒன்று மலையில் மோதி நொருங்கியதில் விமானசிப்பந்திகள் உட்பட 115 பேர் உயிரிழந்தார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

ஒரே ஒரு பயணி மட்டும் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப் பட்டது.

மோசமான கால நிலை காரணமாக விமான நிலையத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மலையுடன் விமானம் மோதியது என்று தெரிவித்தது. (த-எ)

## கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் இவ்வாண்டு நடைபெற்ற முகாமைத்துவப் பயிற்சி கருத்தரங்குகளில் கலந்து கொண்ட அதிபர்கள், மற்றும் பகுதித் தலைவர்களுக்குரிய கொடுப்பனவும், சான்றிதழ்களும் இன்று முதல் எதிர் வரும் 30 ஆம் திகதிவரை வழங்கப்படும்.

உரியவர்கள் முகாமைத்துவ நிலையத்தில் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என முகாமைத்துவ நிலைய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஜூன் ஆகிய மாதங்களில் மேற்படி கருத்தரங்குகள் நடைபெற்றன. (உ-5)

## மாவீரர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்பட்டது.

அந்த வேளையில் அனைவரும் தேசியக் கொடிக்குச் சமீபமாக எழுந்து நின்று கொடி வணக்கம் செலுத்தினர். கொடிக் கம்பத்திற்கு மலர்தூவியும் அஞ்சலி செய்யப்பட்டது.

கொடி வணக்கத்தைத் தொடர்ந்து அமைதி வணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பந்தல்களில் வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மக்கள் தீபாஞ்சலி, மலரஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாண நகரில் யாழ். மாவீரர் பணிமனையில் நடைபெற்ற நினைவு நிகழ்வினை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். விடுதலைப் புலிகள் யாழ். மாவட்டச் செயலகத்திலும் திரு. இளம்பரிதியே தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

யாழ். செயலகத்தில் மாவீரர் நினைவு நிகழ்வுகளை அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுப் பந்தல்கள், வளைவுகள், கொட்டகைகள் அனைத்திலும் ஒலிபெருக்கிகள் மூலம் எழிச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. நினைவுப் பந்தல்கள், கொட்டகைகள் அனைத்தும் மஞ்சள் சிவப்பு வர்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இரவு ஜெகசோதியாக ஒளிர்ந்தது.

மக்கள் நேற்றுக்காலை முதல் இரவு வரை சாரிசாரியாகப் பெரும் எண்ணிக்கையில் சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் நூற்றுக்கணக்கான மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் கிராமக் கோட்டுச் சந்தி, நெல்லியடிச் சந்தி, உடுப்பிட்டிச்சந்தி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட நினைவுப் பந்தல்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் மாவீரர்களுக்கு காலை முதல் இரவு வரை அஞ்சலி செலுத்தினர்.

வடமராட்சி வடக்கு கடற்புலிகள் கோட்டத்தில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறையிலும், வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் கோட்டத்தில் செம்பியன்பற்றிலும் அமைக்கப்பட்ட நினைவுப் பந்தல்களிலும் மக்கள் சாரிசாரியாகச் சென்று மாவீரர்களுக்குத் தமது இதயபூர்வமான அஞ்சலிகளைச் செலுத்தினர்

சுன்னாகம் மத்திய சந்தையில் மிகப் பிரமாண்டமான மாவீரர் கூடத்திலும் மாவீரர் வார நிகழ்வுகள் நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றன. நேற்றுக் காலை 10 மணிக்கு மாவீரர் கூடத்தை திரு. பொன் தியாகம் திறந்து வைத்தார்.

இந்த மாவீரர் கூடம் தமிழர் போராட்ட வரலாறைச் சித்திரிக்கும் வகையில் பெரும் பணச்செலவில் திரு. சு. சோமசுந்தரம் என்பவரால் அமைக்கப்பட்டது. பண்டா-செல்வா ஒப்பந்த காலம் தொடக்கம் இன்று நடைபெறும் நிகழ்வுகள் வரை கூடத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகராட்சி மன்ற வளவில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான பந்தலில் பெரும் எண்ணிக்கையான மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

சாவகச்சேரி பஸ் நிலையம், சங்கத்தானை, மீசாலை, கனகம்புளியடி ஆகிய இடங்களிலும் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு குடாநாட்டின் நகரங்கள், கிராமங்கள் யாவும் எழிற்கோலம் பூண்டுள்ளன. அலங்கார வளைவுகள், போராட்ட வடிவங்களை சித்திரிக்கும் பதாகைகள் என்பன மேலும் அழகு சேர்க்கின்றன. வளைவுகள் பலவும் திராவிடக் கட்டடக் கலை மிளிர அமைக்கப்பட்டுள்ளன. (அ)

## படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் — மிக அதிகமான யுத்தச் செலவுடன் — இந்த வருடமும் கழிகின்றது.

பூநகரி இழப்பு ஸ்ரீலங்காப் படைகளுக்கு முன்னர் எப்போதும் சந்தித்திராத பேரிழப்பாக அமைந்து விட்டது.

இந்த இழப்புகளின் பின் விளைவுகள் குறித்து கருத்துக் கேட்டபோது அதற்குப் பதிலளிக்க ஸ்ரீலங்கா படை அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

இந்தச் சண்டை ஆரம்பமாவதற்கு முன்னரே —

படையினரின் முன்னணிப் பாதுகாப்பு நிலைகள் மீது விடுதலைப் புலிகள் கடும் நெருக்குதல் கொடுத்து வருவதாக செய்திகள் வந்த வண்ணம் இருந்தன.

### மனவுறுதி குலைவு

''கவுண்டர் பொயின்ற்'' பத்திரிகையின் ஆசிரியரும் பிரபல இராணுவ விமர்சகர்களுள் ஒருவருமான வர்ண கருணதிலக கூறியதாவது:.

படையினரின் மனவுறுதி முன்னர் எப்போதும் இல்லாதவாறு மிகக் குன்றிப் போய் இருக்கிறது.

1983 முதல் இதுவரை 17 ஆயிரம் துருப்பினர் படைகளை விட்டு ஓடியுள்ளனர்.

1983 இல் முழு இராணுவத்திலும் இருந்த படையினரின் எண்ணிக்கை வெறும் 14 ஆயிரம் தான்.

அதனோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பிரச்சினையின் ஆழம் தெளிவாகப் புரியும்.

இராணுவத்தில் அதிகாரிகள் தரத்தில் மட்டும் 700 பேருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன.

சண்டையிடும் பிரிவுகளிலும் பெரும் ஆள்பற்றாக்குறை நிலவுகிறது. பல பிரிவுகளில் ஐம்பது வீத ஆள்பற்றாக் குறை உள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாக ஏற்பட்ட இழப்புகள் மேலும் நிலைமையை மோசமடையச் செய்திருக்கின்றன.

— என்று வர்ணகருணதிலக கூறியுள்ளார்.

### உட்பூசல்

கடந்த ஆண்டில் ஸ்ரீலங்கா இராணுவம் அதன் கட்டளைப் பீடத்தில் தொடர்ந்து இடம் பெற்று வரும் உட்பூசல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மன அதனை மறுத்துள்ளார்.

''வேறு நலன்களை எதிர்நோக்குவோர் இத்தகைய கருத்துக்களைப் பரப்பியுள்ளனர். இராணுவத் தலைமைப் பீடத்தில் கருத்து வேறுபாடுகள், உட்பூசல்கள் இல்லை.

''நாட்டுக்காக இதய சுத்தியுடன் கட்டளைப்பீடம் செயற்படுகின்றது. குடும்பங்களுக்குள் சிறு பிணக்குகள் வருவதில்லையா? அது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது.''

—இவ்வாறு அங்கம்மன குறிப்பிட்டார்.

ஆனால் மறுபுறத்தில் —

இராணுவத்தின் செயல் திறமையின்மைக்கு உட்பூசல் தான் பிரதான காரணம் என வர்ண கருணதிலக போன்ற இராணுவ விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

''இராணுவத் தலைமைப் பீடத்தில் உள்ளோர் தங்களுக்கிடையேயான பிணக்குகளில் ஆர்வம் காட்டும் போது —

''ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் தனி ஆளின் நடவடிக்கையாக அமைகிறது. ஒருவர் திட்டமிட்டு செயற்பட, அடுத்த பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் எந்த வழியிலாவது அத்திட்டத்துக்கு குழிபறிக்கும் வேலையைச் செய்வர்.

''1990 முதல் இதைத் தான் நாம் செய்கிறோம்.

''இராணுவத்தில் இரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் தமது செல்வாக்கை நிலைநாட்டுவதற்காக சண்டையிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.''

— இவ்வாறு வர்ண கருணதிலக குறிப்பிட்டிருக்கிறார்.

இராணுவத்துக்குள் வாக்குவாதம் தொடர்பாக செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கும் அதேவேளை —

இராணுவத்தினதும் அரசியல் தலைமைத்துவத்தினதும் கருத்துகள் நெருங்கி வருவதாகத் தெரிகிறது.

— என்று பி. பி. ஸி தெரிவித்தது. (உ)

நெடுஞ்சாலையெங்கும் நிழல் மரம் வை - மக்கள்
கொடும் வெய்யில் தணிவார் நெடுங்காலம் மெய்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாய மன்னர் தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 22

வடதமிழீழத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் 93/94 பெரும்போக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளிடையே உச்ச விளைவைப் பெறும் விவசாயியைத் தெரிவு செய்து, அவருக்கு ''விவசாய மன்னர்'' எனும் சிறப்புப் பட்டமும் பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கி கௌரவிக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்தப் போட்டிகள் மாவட்டங்கள் தோறும் மானாவாரியாக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மத்தியிலும், நீர்ப்பாசனத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மத்தியிலும் தனித்தனியாக நடத்தப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 5 பரப்புக்கு மேற்பட்ட காணியில் மானாவாரி நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட கோட்ட செயலகங்களிலும் கமநல சேவை நிலையத்திலும், வட்ட தொடர்பாளர் அலுவலகத்திலும் 10 ரூபாவைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தில் விண்ணப்பப்படிவங்களை டிசம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னதாக ''தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்'', மாவட்டச் செயலகம், கோண்டாவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.

# உத்தரப்பிரதேச தேர்தலில் 2 வேட்பாளர்கள் கொலை

புதுடில்லி, நவ. 22

இந்திய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் உத்தரப் பிரதேச மாநில சட்டசபைக்கான தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்களிப்பு நேற்று நடந்தது.

இத்தேர்தலில் இரு வேட்பாளர்கள் கொல்லப்பட்டனர். மற்றப்படி அமைதியாகத் தேர்தல் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐம்பது சதவீதம் வரையான வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர்.

இத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வெற்றியீட்டாவிட்டால் —

பிரதமர் நரசிம்மராவின் தலைமை குறித்து குறை கூறி வரும் அக்கட்சியின் அதிருப்தியாளர்களுக்கு அது ஒரு கருவியாக அமைந்துவிடும் என்று பி. பி. ஸி. குறிப்பிட்டது.

# தொலைபேசி ஒற்று கேட்பது தொடர்வதாக முறைப்பாடு

கொழும்பு, நவ. 22

தொலைபேசி உரையாடலை ஒற்றுக் கேட்பது தொடர்ந்து இடம்பெறுவதாக ஜனாதிபதிக்கு முறையிடப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. மஹிந்த ராஜபக்ஸ ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சில் உள்ள விசேட பிரிவு ஒன்று மிகமுக்கிய பிரமுகர்களின் உத்தரவின் மீது தொலைபேசி ஒற்றுக் கேட்டலில் ஈடுபட்டிருப்பதாகவும்—

பின்னர் அந்த உரையாடல்கள் அரசியல் நோக்கங்களுக்கு பாவிக்கப்படுவதாகவும் அவர் தமது கடிதத்தில் குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

சிறிது காலமாக தொலைபேசி ஒற்றுக் கேட்டல் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இப்போது அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த-எ)

## கொலராவின் தாக்கம் குறைகிறது

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். குடாநாட்டில் வாந்திபேதி நோயின் (கொலராவின்) தாக்கம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து யாழ். ஆஸ்பத்திரியில் கொலரா நோயாளருக்கு என ஒதுக்கப்பட்டிருந்த விஸ்தீரணமான வார்ட் மாற்றப்பட்டது.

தற்போது இரண்டு, மூன்று கொலரா நோயாளிகளே வாட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-15)

## மருந்து தட்டுப்பாடு

வடமராட்சி, நவ. 22

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சலரோக சிகிச்சைப் பிரிவு உட்பட மற்றைய சிகிச்சைப் பிரிவுகளுக்கும் தேவையான மருந்து வகைகள் எதுவும் இல்லாதிருக்கிறது. பனடோல் குளிசைகளுக்குக் கூட இங்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த173)

## மருதடிக் குளம் புனரமைப்பு

செம்பியன்பற்று தெற்கில் அமைந்துள்ள மருதடிக் குளத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மக்களுடன் இணைந்து புனரமைப்பு செய்துள்ளன.

சுமார் 9,604 சதுர அடி பரப்பைக் கொண்ட இக்குளத்தைப் புனரமைப்புச் செய்ததன் மூலம் அப்பகுதி மக்கள் பெரிதும் பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## M. S. வின்சன்

M. S. வின்சன் அவர்கள் காலமாகிவிட்டார். இவர் றோசலின் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற சூசை, றோசம்மா தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும் செபமாலை, சொர்ணம் தம்பதிகளின் மருமகனும், மாலா, மாலினி, பிறின்ஸ்றோஜஸ், றஜனி, நிறோஜினி, ஜெங்கின்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ் சென்ற அருளானந்தம் (R. M. P.) திருமதி நீற்ரா (இளைப்பாறிய ஆசிரியை) அலெக்ஸாண்டர், திருமதி. மெக்டலின், திருமதி. ஜெயராணி அம்பலவாணர் (ஆசிரியை யா / திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற சவுந்தரநாயகம் (மீன்பிடி இலாகா), வேதநாயகம் (நோர்வே), அம்பலவாணர் (I. C. R. C), திருமதி லில்லிமலர், திருமதி. ஜெயராணி அலக்ஸாண்டர் (ஆசிரியை யா / போக்கட்டி றோ. க. த. க பாடசாலை) ராணி, தங்கமலர், காலஞ் சென்ற செபஸ்ரியாம்பிள்ளை, அரியராசா, பவளம், தங்கராஜா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பிறின்ஸ் றோஜஸ்
(மகன்)

10 இராசேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்,
(28144)